**செய்தி வெளியீடு எண்:03** **நாள்:06.01.2021**

## அரசு கல்வியியல் கல்லூரிகளில் முதுநிலை கல்வியியல் (M.Ed.) பட்டப்படிப்பு சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் இணையதளம் வழியாக பதிவு செய்யலாம்

அரசு கல்வியியல் கல்லூரிகளில் **2020–2021** ஆம் கல்வியாண்டிற்கான முதுநிலை கல்வியியல் (M.Ed.) பட்டப்படிப்பு சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் இணையதளம் வழியாக **07–01–2021** முதல் **13–01–2021** வரை www.tngasaedu.in என்ற இணையதள முகவரியில் பதிவு செய்யலாம். ஒரு கல்லூரிக்கு விண்ணப்பம் பதிவு செய்ய பதிவுக் கட்டணம் ரூ.**2/–** மற்றும் விண்ணப்பக் கட்டணம் ரூ.**58/–** சேர்த்து ரூ.**60/–** செலுத்தப்பட வேண்டும். SC/ST விண்ணப்பதாரர்களுக்கு பதிவுக் கட்டணம் ரூ.**2/–** மட்டும் செலுத்தினால் போதுமானது. மாணாக்கர்கள் விண்ணப்பிக்கும் போது தங்களது விருப்ப வரிசைப் படி கல்லூரிகளை தெரிவு செய்தல் வேண்டும். மேலும், மாணாக்கர்கள் விண்ணப்பிக்கும் போது தங்களது சான்றிதழ்களை www.tngasaedu.in என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல் வேண்டும். இது தொடர்பான கூடுதல் விபரங்கள் www.tngasaedu.in இணையதள முகவரியில் கொடுக்கப்பட்டுள்ளது. இணையதளத்தில் பதிவு செய்வதில் ஏதேனும் சிரமம் இருந்தால் மாணாக்கர்கள் **044–22351014, 044–22351015** மற்றும் **044–28276791** என்ற எண்ணிற்கு காலை **10** மணி முதல் மாலை **6** மணி வரை தொடர்பு கொண்டு கூடுதல் விவரம் மற்றும் வழிகாட்டுதல் பெறலாம். இது தொடர்பாக care@tngasaedu.org மற்றும் tndceoffice@gmail.com என்ற email முகவரி மூலமாகவும் மாணாக்கர்கள் சந்தேகங்களை கேட்டு தேவையான வழிகாட்டுதல்களைப் பெறலாம்.

**கே.பி. அன்பழகன்**
உயர்கல்வி மற்றும்
வேளாண்மைத் துறை அமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**